ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 8 ஏப்ரல் 2003 கானம் : 9

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 89 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 5 |
| 4. | வேத கதைகள் - 70 | 8 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 60 | 10 |
| 6. | ஸனாதனப் புதிர் - பகுதி - 24 | 12 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 64 | 14 |
| 8. | மாலே மணிவண்ணா - 7 | 19 |
| 9. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 14 (தொடர்ச்சி) | 21 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 91 | 25 |
| 11. | செய்திகள் | 29 |
| 12. | திருக்குலத்தோர் திருக்கோயில் திருப்பணித் திட்டம் | 30 |
| 13. | பக்தர்களின் கவனத்திற்கு ! | 31 |


*க்ருபணோஹம் தே பவனத்வாரே*
*க்ரந்தாமி விபோ க்ருஷ்ண முராரே!*
*க்ருபயா ப்ரேமபிக்ஷாம் தத்வா*
*க்ருதார்த்தம் மாம் குரு கம்ஸாரே!*

**- ஸ்ரீ ரங்க சதகத்தில் பரனூர் மஹாத்மா**
**ஸ்ரீஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்**

''ஏழையான நான் உமது வீட்டின் வாசலில் வந்து விபோ! க்ருஷ்ணா! முராரே! கம்ஸாரே! என்று கதறுகின்றேன். க்ருபையுடன் ப்ரேம பக்தியாகிய பிக்ஷையைத் தந்து என்னை க்ருதார்த்தனாய்ச் செய்வீராக!''

ஶ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : மாண்டு தாளம் : ஆதி

தோழன்

*மறைந்து வந்து வெண்ணை திருடும் கள்ள க்ருஷ்ணா !*
*மறைபொருளும் நீயே என்று கண்டுகொண்டேன் !*
*நித்தம் உனை காணாமல் ராதா க்ருஷ்ணா !*
*சித்தம் துடிக்குதடா ச்யாமள க்ருஷ்ணா !*

*குழல் ஓசை கேட்டவுடன் கோபி க்ருஷ்ணா !*
*சூழல் தனை மறந்துவிட்டேன் மோஹன க்ருஷ்ணா !*
*எங்கு நடனம் கற்றாயோ செல்ல க்ருஷ்ணா !*
*எனக்கும் கற்று தருவாயோ கள்ள க்ருஷ்ணா !*

*வெண்ணை தன்னில் எனக்கு பங்கு உண்டோ க்ருஷ்ணா !*
*இல்லாவிட்டால் பேசமாட்டேன் போடா க்ருஷ்ணா !*
*மாமிவந்தால் சொல்லிடுவேன் வெண்ணை கொடு!*
*மாட்டிக்கொண்டு வருந்தாதே கள்ள க்ருஷ்ணா !*

*அன்னையிடம் சொல்லிடுவேன் வெண்ணை கொடு !*
*உன்னை உரலில் கட்டி போட்டிடுவாள் கண்ணா கண்ணா !*
*என்னை போல் உனக்கு தோழனுண்டோடா*
*கெஞ்சி கெஞ்சி கேட்கின்றேன் வெண்ணை கொடு !*

க்ருஷ்ணன்

*மண்ணை நான் தின்றபோது தோழா! தோழா!*
*வந்து நீயும் பங்கு கேட்டாயோடா !*
*அன்னை அதட்டி அடிக்கும்போது*
*வந்து பங்கு கேட்டாயோ தோழா! தோழா!*

*மலையை குடையாய் பிடித்தபோது!*
*நீயும் வந்து நின்றாயோ தோழா தோழா!*
*வெண்ணை மட்டும் பங்கு கேட்டால்*
*இது உனக்கு அழகோடா தோழா! தோழா!*

தோழன்

*வெண்ணை திருடி ஓடிச் செல்லும் க்ருஷ்ணா! க்ருஷ்ணா !*
*என்னை கண்டு ஒளியலாமோ க்ருஷ்ணா! க்ருஷ்ணா !*
*நித்தம் உனை காணாமல் ராதா க்ருஷ்ணா !*
*சித்தம் துடிக்குதடா ச்யாமள க்ருஷ்ணா !*

மதுரையில் ஸ்ரீ ஸ்வாமிஜி இதுவரை ஓரிரு நாட்கள் மட்டுமே ஆங்காங்கே உபன்யாஸம் செய்திருக்கின்றார்களே தவிர, சேர்ந்தாற்போல் உபன்யாஸம் நிகழ்த்தியதில்லை. இந்தமுறை, ஸ்ரீ மதனகோபாலஸ்வாமி திருக்கோயிலில் தொடர்ந்தாற்போல் உபன்யாஸம் நிகழ்த்தினார்கள். ஏற்கனவே, பலமுறை ஸ்ரீ ஸ்வாமிஜி இந்த மதனகோபால ஸ்வாமி கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்துள்ளார்கள். இங்கு கண்ணன், ஆண்டாள் பாடியதுபோல் சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையனாகவும், குழலை ஊதிக்கொண்டும், கால்களை மாற்றி வைத்துக்கொண்டும் உள்ளான். தினமும், ஆயிரக்கணக்கான மக்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாஸம் கேட்டு மகிழ்ந்தார்கள். ஸ்ரீராமாநுஜதாசன் அவர்கள் வெகுவிமரிசையாக ஏற்பாடுகள் செய்திருந்தார். கடைசி நாளன்று நூற்றுக்கணக்கான மக்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தாரக நாமமாகிய ‘ராமநாம’ உபதேசம் பெற்றனர்.

ஸ்ரீ ஸ்வாமிஜி மதுரையில் தங்கியிருந்தபொழுது, ஒருநாள் காரைக்குடியில் உள்ள ஸ்ரீ பெரியகருப்பன் என்ற பக்தர் வீட்டிற்கும், அதையொட்டியுள்ள அரியக்குடி ஸ்ரீநிவாஸபெருமாள் ஆலயத்திற்கும் சென்று வந்தார்கள். அந்த ஸ்ரீநிவாஸபெருமாள் ஆலயத்திற்கு எதிரில் ஒரு சிறிய நரசிம்மன் ஆலயமும் உள்ளது. அந்த நரசிம்மனையும் ஸ்ரீ ஸ்வாமிஜி தரிசனம் செய்தார்கள். அங்கு சிறிதுநேரம் நாமஜபத்தின் பெருமையைப் பற்றி உரையாற்றினார்கள். அங்கு வந்திருந்த ஒரு இஸ்லாமிய அன்பரும் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரையைக் கேட்டு மிகவும் ரசித்தார்.

மதுரை, திருநகரில் வசிக்கும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அவர்களது இல்லத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி தங்கியிருந்தார்கள். பல பக்தர்கள் தங்களது இல்லங்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியை அழைத்துச் சென்றனர். பலர், ஸ்ரீ ஸ்வாமிஜி தங்கியிருந்த திருநகர் இல்லத்திற்கும் தேடி வந்தனர். ஸ்ரீ ஸ்வாமிஜி இது பற்றி சொல்லும்பொழுது, ‘‘ஒவ்வொருவருடைய

இல்லத்திற்கும் சென்று வந்த அனுபவமும் எனக்கு மறக்க முடியாததாகிவிட்டது. காரணம், பாகவத ஸப்தாஹம், நாராயணீயம், அபிராமி அந்தாதி, ஹரிநாம ஸங்கீர்த்தனம், ஸம்பிரதாய பஜனை, அகண்ட நாமகீர்த்தனம், திருப்புகழ் என்று ஒவ்வொரு வீட்டிலும் மாறிமாறி ஏதோ ஒன்று நடந்துகொண்டே இருந்தது. நான் சென்ற இடங்களில் எல்லாம் பல பக்தர்கள், 'ஹரே ராம...' மஹாமந்திர கீர்த்தனம் செய்த வண்ணம் இருந்தார்கள்'' என்று கூறினார்கள்.

இதன் நடுவில், ஒருநாள் ஸ்ரீ ஸ்வாமிஜி அங்குள்ள ஹரிஜன வீதிக்கு சென்று நாமகீர்த்தனம் செய்தார்கள். பல பக்தர்களும் ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் சென்று பகவந்நாமகீர்த்தனம் செய்தார்கள். இவற்றையெல்லாம் விடவும், ஒவ்வொரு வீட்டிலுள்ளவர்களும், ஸ்ரீ ஸ்வாமிஜியிடம், தங்களுக்கு உலக சுகங்கள் எதுவும் வேண்டாம் என்றும், பகவத்பக்திதான் வேண்டுமென்றும், எப்பொழுதும் ஸத்ஸங்கம்தான் வேண்டுமென்றும், பகவான்தான் வேண்டும் என்றும் பிரார்த்தித்துக்கொண்டது மிகவும் ஆச்சரியமாக இருந்தது என்று ஸ்ரீ ஸ்வாமிஜி சொன்னார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி, கள்ளழகரையும், சோலைமலை முருகனையும் ஒருநாள் சென்று தரிசித்து வந்தார்கள். கடைசிநாள் உபன்யாஸத்தில் கூடலழகர், கள்ளழகர், திருமோகூர் காளமேகப் பெருமாள், திருக்கோஷ்டியூர் ஸௌம்ய நாராயணர் போன்ற க்ஷேத்திர வைபவங்களை எடுத்து பேசினார்கள். மதுரை விஜயம் ஒரு தனி அனுபவமாக இருந்ததென்று ஸ்ரீ ஸ்வாமிஜி சொன்னார்கள்.

பிறகு மதுரையிலிருந்து கிளம்பி மார்ச் 5-ந் தேதி மாலை, சேலம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில், பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜயந்தியை ஒட்டி, ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி உரையாற்றினார்கள். அங்கும் திரளாக மக்கள் வந்து உபன்யாஸத்தைக் கேட்டு மகிழ்ந்தார்கள். சேலத்திலிருந்து கிளம்பி பொள்ளாச்சியில் Dr. கனகராஜன் அவர்கள் இல்லத்திற்குச் சென்றுவிட்டு சென்னை திரும்பினார்கள்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : நான் ஸமுதாயத்திற்கு உபயோகமாக பல விதமான ஸேவைகள் செய்து வருகின்றேன். இருந்தபோதிலும் பலர் எனக்கு பல விதங்களிலும் இடையூறுகள் ஏற்படுத்தி எதிர்க்கின்றனர். எனக்கு இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, ''இத்தனை எதிர்ப்புகளுக்கு நடுவே நான் ஏன் இதையெல்லாம் செய்ய வேண்டும்? இந்த ஸேவைகளை எல்லாம் விட்டுவிடலாமா?'' என்று எனக்கு தோன்றுகிறது.*

பதில் : குயில் மிகவும் அழகாகப் பாடும். நாம் அதை நன்றாக ரசித்துக் கொண்டிருக்கும்பொழுதே ஒருவன் அதை உண்டிக்கல்லால் அடித்து விடுகின்றான். மயிலுடைய தோகை வண்ணமயமானது. அதைவிட அது தோகையை முன்னும் பின்னும் அசைத்து ஆடுவது அதிஅற்புதமானது. ஆனால், அதை நாம் ரசித்துக்கொண்டிருக்கும் பொழுதேகூட, ஒரு வேடன் அதை அடித்துவிடுவான். இதிலிருந்து நமக்கு என்ன தெரிய வருகின்றது என்றால் ஒருவர் மீது நமக்கு வெறுப்பு வந்துவிடுமானால், அவரிடம் இருக்கக்கூடிய எந்த நல்ல விஷயமும் நம்முடைய கண்களுக்குப் படாது. ஆகவே, பிறருடைய எதிர்ப்புகள் பற்றியெல்லாம் கவலைப்படாமல் நீங்கள் தொடர்ந்து உங்கள் தொண்டை ஆற்றிவாருங்கள்.

*கேள்வி : நீங்கள் சமீபத்தில் பேசிய ஒரு சொற்பொழிவில், கடந்த நூற்றாண்டில் பல நபர்கள் எல்லா சமூகத்தினரையும் ஆலயத்திற்குள் விட வேண்டும் என்று போராடியதைக் காட்டிலும், ஜாதிக் கட்டுப்பாடுகள் தீவிரமாக இருந்த ஒரு காலத்தில், அதாவது சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே ராமானுஜர் போராடியது தான் உயர்ந்தது என்று கூறியிருந்தீர்கள். இது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.*

பதில் : ஜாதிக்கட்டுப்பாடுகள் தீவிரமாக கடைப்பிடிக்கப்பட்ட அந்த காலத்தில் எல்லா சமூகத்தினரையும் ஆலயத்திற்குள் விடவேண்டும் என்று ராமானுஜர் போராடியது பெரிய விஷயம். ஆனால், இதில்

மற்றொரு விசேஷமும் உள்ளது. அது என்னவென்றால், பிற்காலத்தில் போராடியவர்கள் போராடியது அவர்களுடைய உரிமைக்காக மட்டுமே. ஆனால், ராமானுஜர் போராடியது அவர்களையும் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாக்க வேண்டும் என்கின்ற உயரிய எண்ணத்தினால்!

***கேள்வி : பகவான் ஸ்ரீ ரமணமஹரிஷிகள் கூட கீர்த்தனம் செய்திருக்கின்றார் என்று ஸமீபத்தில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் கூறியிருந்தீர்கள். அப்படி ஒரு ஸம்பவம் நடந்ததா?***

பதில் : பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளுடன், அவருடைய தாயார் தங்கியிருந்தார். ஒரு ஸமயம், அவருடைய தாயாருக்கு உடல்நிலை சரியில்லாமல் ஆயிற்று. பகவான் ரமணர், அருணாசலேஸ்வரனிடம் பிரார்த்தித்து தன்னுடைய தாயாரின் உடல் நிலை சரியாகும்படி அழகாக நான்கு பாடல்களைப் பாடினார். மஹரிஷியின் வேண்டுகோளை ஏற்று இறைவனும் அவருடைய தாயின் நோயை குணமாக்கினார். அந்த பாடல்களையும் கீழே குறிப்பிட்டுள்ளேன்.

*அலையா வருபிறவியத்தனையு மாற்ற*
*மலையா யெழுந்த மருந்தே - தலைவாநின்*
*றாள்கதியாய் வாழுமென் றாய்தாப மாற்றியே*
*யாள்வதுவு முன்கடனே யாம்.*

*காலகா லாவுன் கமல பதஞ்சார்ந்த*
*பால னெனையீன்றாள் பாலந்தக் காலன்றான்*
*வாரா வகையுன்கால் வாரிசமே காட்டுவா*
*யாராயிற் காலனுமே யார்?*

*நானாங்கி யாயோங்கு நல்லருண வோங்கலே!*
*ஞானாங்கி யாலன்னை நல்லுடலை - ஞானாங்க*
*மாகச்செய் துன்பதத்தி லைக்கியமாக் கிக்கொள்வாய்*
*சாகத் தீமூட்டுவதேன் சாற்று*

*மாயா மயக்கமதை மாற்றருண மாமலையென*
*றாயார் மயக்கற்றத் தாமதமேன் - றாயாகித்*
*தன்னையடைந் தார் வினையின் றக்கறுத்தாள் வாருலகி*
*லுன்னையலா லுண்டோ வுரை!*

*கேள்வி : இறைவனைப் பற்றி கற்பனை செய்வதுதான் பக்தியா?*

பதில் : ஆம். இதற்குதான் **பா**வபக்தி என்று பெயர். சாதாரணமாக, வாழ்க்கையில் ஒரு தொழில் நடத்தி, பொருள் ஈட்டி பெரிய தனவந்தனாக வாழ ஆசைப்படுபவனிடம் ''பெரிய பணக்காரனாக ஆனபிறகு எப்படியெல்லாம் வாழ்க்கையை அனுபவிப்பாய் என்று கற்பனை செய்து பார்!'' என்று சொன்னால் சந்தோஷமாக கற்பனை செய்வான். அந்த கற்பனை உலகிலேயே சஞ்சரிப்பான். ஆனால், வெறும் கற்பனை செய்தால் மட்டும் போதாது. உழைக்க வேண்டும். முயற்சி வேண்டும். இடையூறுகளைக் கண்டு தளராமை வேண்டும். அப்பொழுதுதான் பெரிய தனவந்தனாக ஆக முடியும் என்று கூறுவோம். கற்பனை என்பது இயல்பானது; சுககரமானது; சுலபமானது; எல்லோராலும் முடியக்கூடியது.

யோக, வேதாந்த, தியான, கர்ம ஸாதனைகள் எல்லாம் உழைப்பைப் போன்றது. ஆனால், பக்தி என்பது நமக்கு பிடித்த விதத்தில் எல்லாம் இறைவனை கற்பனை செய்து பார்ப்பதுதான். ஆகவே, இது இயல்பானது; ரஸகரமானது; எல்லோராலும் முடியக்கூடியது; ஆகவே, பக்தி எல்லோருக்கும் சுலபமானது.

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

# வேத கதைகள் - 70

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## இஷீகை ஆயுதம்

வைச்வமனஸம் என்ற ஸாமாவின் வரலாறு. விச்வமனஸ் என்ற ஒரு முனிவர் இருந்தார். அவர் தினமும் வேதம் ஓதி வந்தார். அந்த வேதாத்யயனத்தின் மஹிமையால் அரக்கர்களால் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு ஸமயம், அதிகமான களைப்பு இருந்ததால் வேதம் ஓதுவதை சிறிது நேரம் நிறுத்தி வைத்தார். அந்த ஸந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஒரு அரக்கன் அந்த முனிவரை பீடித்தான். இதை அறிந்த இந்திரன், ''முனிவரை அரக்கன் பீடித்து உள்ளான். அரக்கனிடமிருந்து முனிவரை விடுவிப்பதற்கு எந்த உபாயத்தை கடைப்பிடிக்கலாம்'' என்று ஆலோசித்தான்.

நன்கு ஆலோசித்து முனிவரைப் பார்த்து, 'ஓ! முனிவரே; உம்மைப்பீடித்து இருப்பவன் யார்? என்று கேட்டான். உடன் முனிவர் உடலில் ஒளிந்திருக்கும் அரக்கன், ''என்னை பீடித்திருப்பது ஒரு கட்டை, என்று கூறுவாய்'' என்று முனிவனிடம் சொல்லி அதை இந்திரனிடம் தெரிவிக்கச் சொன்னான். முனிவரும் என்னைப் பீடித்திருப்பது கட்டை என்று கூறினார். பிறகு ஒரு இஷீகையை (இஷீகை என்றால் சீவி ஈர்க் என்று சொல்லப்படுகிறது) மந்த்ர சக்தியினால் வஜ்ராயுதமாக்கி இதனால் அரக்கனை அடி என்று கூறி முனிவரிடம் கொடுத்தான். உடனே முனிவரும் அதைப்பெற்று தன்னை பீடித்திருக்கும் அரக்கன் மேல் எறிந்தார். இந்த ஆயுதமானது அரக்கனின் மண்டையைப்பிளந்தது. அரக்கனைக் கொன்றதால் இந்திரனுக்கு பாபம் ஏற்பட்டது.

அந்த பாபத்தைப் போக்கடிக்க விச்வமனஸ் என்ற முனிவரால் கண்டுபிடிக்கப்பட்ட ''வைச்வமநஸம்'' என்ற ஸாமாவை கானம் செய்தான். ஸாமகானத்தின் பெருமையால் இந்திரனை விட்டு பாபம் அகன்றது. இந்த 'வைச்வமனஸம்' என்ற ஸாமாவை எவன் கானம்

செய்கிறானோ அவன் எல்லா பாபங்களிலிருந்து விடுபடுகிறான். இந்தக் கதையினால் பல உண்மைகள் நமக்குப் புலனாகின்றன.

(1) நல்லவர்களுக்கு துன்பம் ஏற்பட்டால் அதைப் போக்க நாம் முயலவேண்டும். அப்படி முயலும்பொழுது நமக்கு எந்தவிதமான சிரமம் வந்தாலும் அதைப் பொருட்படுத்தக் கூடாது என்பது தெரிகிறது. இங்கு முனிவரை அரக்கன் பீடித்தபோது இந்திரன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கவில்லை. அரக்கனிடமிருந்து முனிவரை விடுவிக்க முயற்சி செய்தான். இந்த முயற்சியால் இந்திரனுக்குப் பாபம் ஏற்பட்டது. தனக்கு பாபம் வந்தாலும் முனிவருக்கு துன்பம் ஏற்படக்கூடாது என்று முயற்சித்தான். இதைப்போல் நாமும் நல்லோருக்கு ஒரு துன்பம் ஏற்பட்டால் பல கஷ்டங்களைத் தாங்கியாவது நல்லவர்களின் துன்பத்தைப் போக்க வேண்டும்.

(2) இங்கு அரக்கனை முனிவர் கொன்றார். ஆனால் பாபம் இந்திரனுக்குத்தான் ஏற்பட்டது. கொலை செய்பவனைக் காட்டிலும் கொலை செய்யத் தூண்டுபவன்தான் பெரிய குற்றவாளியாகிறான். இங்கு முனிவர் தான் அரக்கனைக் கொன்றாலும் முனிவரை ஏவியதால் இந்திரனுக்கு பாபம் ஏற்பட்டது.

(3) ராமாயணத்தில் காகாசுரனைக் கொல்ல ராமன் தர்ப்பத்தில் ப்ரம்மாஸ்த்ரத்தை அபிமந்தனம் செய்து போட்டார் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த கதைக்கு இந்த வரலாறு மூலமாக உள்ளது. இதை வைத்துதான் 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' என்ற பழமொழி ஏற்பட்டிருக்கும்.

(4) பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் பாபங்களைக்கூட ஸாமகானத்தால் போக்கடிக்கலாம்.

இவ்விதமான பல உண்மைகள் இவ்வரலாறு மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த உபாக்யானமானது அஷ்ட ப்ராம்ஹணங்களில் ஒன்றான தாண்ட்ய ப்ராம்ஹணத்தில் கூறப்பட்டுள்ளது.

# எந்தரோ மஹானுபாவுலு - 60

அத்வைதாச்சார்யர், மஹாப்ரபுவின் தந்தையைவிட வயதில் பெரியவர். வித்யையில் ஸர்வச்ரேஷ்டர். மஹாப்ரபுவிற்கு தீக்ஷை அளித்த ஸ்ரீ ஈச்வரபுரி, அத்வைதாசார்யருடன் அத்யயனம் செய்தவர். இப்படி வயதிலும், வித்யையிலும், குலத்திலும், சம்பந்தத்தாலும் விருத்தராகத் திகழ்ந்த அத்வைதாசார்யரை மஹாப்ரபு தனது குருவைப்போன்று மதித்து ஸத்காரம் செய்து வணங்குவார். அத்வைதாசார்யருக்கு இதில் ஸம்மதமே கிடையாது. ப்ரபு தன்னை வணங்கும்போது மிகவும் வெட்கப்படுவார், தன்னையே நொந்து கொள்வார். ப்ரபுவிடம் தாஸ்ய **பா**வத்தில் பக்தி செய்வார். ஆனால், ப்ரபு அவரிடம் குரு**பா**வத்தை வெளிப்படுத்துவதால் வருத்தமடைந்து ஹரிதாஸருடன் சாந்திபூர் சென்று வித்யார்த்திகளுக்கு வேதாந்த சாஸ்த்ரம் கற்றுத்தர ஆரம்பித்து அனவரதமும் வேதாந்த சர்ச்சை செய்யலுற்றார்.

ப்ரபுவிற்கு இவரது மனோ**பா**வம் புரிந்தது. ஒருநாள் அவர் நித்யானந்தரிடம், ‘‘ஸ்ரீபாத்! ஆசார்யர் நெடுநாளாக இங்கே வரக்காணோம். நாமே சென்று சாந்திபூரில் அவரை தரிசனம் செய்துவிட்டு வருவோம்’ என்று கூறி இருவருமாக சாந்திபூருக்கு கிளம்பினார்கள். இருவருமே ப்ரேம அவஸ்தையில் இருப்பவர்கள். லோகமே சரியாகத் தெரியாதல்லவா? செல்லும் வழி தவறி கங்காநதிக் கரையில் உள்ள லலித்பூர் என்ற வேறு ஒரு ஊரை அடைந்தனர். அங்கிருந்த ஒரு வீட்டைக்காட்டி வழியில், ‘‘இது யாருடைய வீடு?’’ என விசாரித்தனர்.

அதற்கு மக்கள் இது ஒரு க்ரஹஸ்த ஸன்யாஸியின் வீடு என்று பதிலுரைத்தனர். அதைக் கேட்டு ப்ரபுவும் உரக்க சிரித்தார். நித்யானந்தரைப் பார்த்து ‘‘ஸ்ரீபாத! இந்த வீடு க்ரஹஸ்த ஸன்யாஸியினுடையதாம்! இது என்ன ஆச்சரியமான விஷயமாக இருக்கிறது! ஒருவன் க்ரஹஸ்தனாகவும் ஸன்யாஸியாகவும் ஒரே சமயத்தில் எப்படி இருக்க முடியும்? நான் இப்படிக் கேள்விப்பட்டதும் கண்டதும் இல்லையே! வாருங்கள் உள்ளே சென்று க்ரஹஸ்த

ஸன்யாஸி எப்படி இருக்கிறார் என்று பார்த்துவிட்டு வருவோம்'' என்று கூறி இருவருமாக உள்ளே நுழைந்தனர். உள்ளே நுழைந்ததும் காஷாய வஸ்திரமணிந்த ஒரு புருஷனைக் கண்டு நித்யானந்தர் அவரை வணங்கினார். ப்ரபுவும் அவரை ஸன்யாஸி என நினைத்து ப்ரணாமம் செய்தார். ஒரு ஸன்யாஸியுடன் மிகவும் ரூபவானும் ஸௌந்தர்யமும் உள்ள ஒரு முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ப்ராஹ்மண குமாரன் வருவதைக் கண்டு அந்த வீட்டிலிருந்த ஸன்யாஸி இருவரையும் வரவேற்று ஆஸனமளித்தார். மூவரும் பரஸ்பரம் பேசிக்கொண்டனர்.

ப்ரபு ப்ரேமையே உருவானவர். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அவர், ''ஸன்யாஸி மஹாராஜ்! எங்களுக்கு ஏதாவது அருந்தக் கொடுங்களேன்'' என்றார். அந்த வீட்டில் இரண்டு பெண்கள் இருந்தனர். வீட்டிலிருந்த க்ரஹஸ்த ஸன்யாஸி உள்ளே நோக்கி ஏதேனும் கொண்டுதருமாறு பணித்தார். அதற்குள் ப்ரபுவும் நித்யானந்தரும் அவசரஅவசரமாகச் சென்று கங்கையில் நீராடிவிட்டு வந்தனர். அதற்குள் அந்த வீட்டிலிருந்த பெண்கள் பழத்துண்டுகள் நிறைந்த தட்டும், கிண்ணங்களில் பாலும் கொண்டு வைத்தார்கள். ப்ரபுவும் நித்யானந்தரும் உண்ண ஆரம்பித்தனர்.

அந்த வீட்டிலிருந்த ஸன்யாஸி வாம மார்க்கத்தைச் சேர்ந்தவர். அந்த சமயத்தில் வங்காளத்தில் வாமாச்சாரம் மிகவும் ப்ரபலமாக இருந்தது. அந்த வீட்டிலிருந்த பெண்மணி, ''சிறிது ஆனந்தமும் கொண்டு வரட்டுமா'' என்று கேட்டாள். உடனே ஸன்யாசி, வேண்டாம் என சமிக்ஞை செய்தார். மாம்பழத்தை உண்டு கொண்டிருந்த ப்ரபு, நித்யானந்தரிடம், ''ஸ்ரீபாத்! ஆனந்தம் என்றால் என்ன வஸ்து? ஸன்யாசியின் பாஷை கூட வேறாக இருக்குமா என்ன? நீங்கள் க்ரஹஸ்த ஸன்யாஸி இல்லையே? உங்களுக்கு மட்டும் இந்த பாஷை எப்படிப் புரியும்?'' என்று கேட்டார்.

இதைக்கேட்டு நித்யானந்தர் உரக்க சிரிக்க ஆரம்பித்தார். ப்ரபு அவரிடம், ''ஸ்ரீபாத்! ஏன் சிரிக்கிறீர்கள். ஆனந்தம் என்றால் என்ன? இனிப்புப் பண்டமா? அப்படியென்றால் வரவழையுங்களேன். பால் குடித்த பிறகு இனிப்பு தின்றால் நன்றாக இருக்கும்!'' என்றார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸனாதனப் புதிர் - பகுதி - 24

தொகுப்பு : **''ஆத்ரேயன்'',** சென்னை.

1. இலங்கையில் சீதையை மீட்பதற்கான யுத்தம் எத்தனை நாட்கள் நடந்தது? எப்பொழுது ஆரம்பித்து எப்பொழுது முடிந்தது?
2. இராமர் என்று வனவாஸத்திற்காக அயோத்தியை விட்டு புறப்பட்டார்?
3. இராமர் வனவாஸத்திற்குப் பிறகு மீண்டும் அயோத்தி திரும்பியது எப்பொழுது? பட்டாபிஷேகம் நடந்தது எப்பொழுது?
4. தசரதர் மரணம் அடைந்த நாள் என்ன? அவருக்கு ஸம்ஸ்காரம், சிரார்த்தம் எப்பொழுது நடந்தது?
5. இராவணனுடைய தாயின் பெயர் என்ன? தாய்வழி தாத்தாவின் பெயர் என்ன?
6. கும்பகர்ணனுடைய மனைவி, மற்றும் பிள்ளைகளின் பெயர் என்ன?
7. அதிகாயனின் பெற்றோர்கள் பெயர் என்ன?
8. இராவணனது அழிவுக்கு சாபமிட்டவர்கள் யார் யார்? அது இராமாயணத்தில் எங்கு காணப்படுகிறது?
9. இராமாயணத்தில் காயத்ரீ மந்த்ரம் - அதனுடைய 24 அக்ஷரங்கள் ஆயிரம் ஸ்லோகங்களுக்கு ஒரு முறை காணப்படுகின்றன. எந்த ஸ்லோகங்கள் எந்த காண்டம் எந்த அத்தியாயம் என்பதைக் குறிக்கவும்.
10. வால்மீகி இராமாயணத்தில் மொத்தம் எத்தனை காண்டங்கள், ஸர்க்கங்கள், ஸ்லோகங்கள் இருக்கின்றன?
11. தர்மத்தின் பொருட்டு ஒருவர் தந்தையைத் துறந்தார், இன்னொருவர் குருவைத் துறந்தார், மற்றொருவர் தமையனைத் துறந்தார், இவர்கள் யார்?
12. பட்டாபிஷேகத்தின்பொழுது ராமரின் வயது என்ன? சீதையைத் தியாகம் செய்தபொழுது என்ன வயது? சீதை பூமிதேவியால் ஏற்கப்பட்டு மறைந்தபொழுது என்ன வயது? பரமபதம் ஏறும்பொழுது என்ன வயது? (ஸித்த ஸங்கேதப்படி இல்லாமல், சாதாரணக் கணக்கில் சொல்லவும்).

## ஸனாதனப் புதிர் பகுதி - 23 விடைகள்

1. ஐயம்-18-ஸ்வர்க்காரோஹண பர்வா - அத்தியாயம் 5 - ஸ்லோகம் 49
2. மூன்று வருஷங்கள்
3. அக்னி தேவன் சொல்படி கடலில் (வருணபகவானிடத்தில்) ஸமர்ப்பிக்கப்பட்டது.
4. பரீக்ஷீத்-ஹஸ்தினாபுரம், வஜ்ரன்-இந்திரப்பிரஸ்தம்
5. 16வது பர்வாவான மௌசல பர்வாவில்
6. ஹஸ்தினாபுரத்தில் 15 வருடம்; வனவாசத்தில் 3 வருடம்
7. எங்கே க்ருஷ்ணனோ அங்கே தர்மம், எங்கே தர்மமோ அங்கே வெற்றி-அனுசாஸன பர்வா - 167-41.
8. 58 நாட்கள்-அனுசாஸன பர்வம் - 167-27
9. அனுசாஸன பர்வா-14-25 முதல் 17-157 வரை - பகவான் வாஸுதேவன்
10. உடல்-உயிரை அழித்தல், திருட்டு, பிறன் மனைவியைக் கவர்தல், வாக்கு-கெட்டபேச்சு, கடுமை, கோள் சொல்லுதல், பொய், மனது-பிறர் பொருளுக்கு ஆசைப்படுதல், எல்லா உயிர்களுக்கும் தீங்கு நினைத்தல், கருமங்களுக்கு பயன் இல்லை என்ற நம்பிக்கை.
11. வைகுண்ட ஏகாதசி ஆரம்பம்; ரதஸப்தமி முடிவு.
12. யுத்தம் ஆரம்பித்து 10வது நாள் பீஷ்மர் வீழ்ச்சி, பிறகு எட்டு நாட்கள் போர் தொடர்ச்சி வீழ்ச்சியில் இருந்து இருபத்தைந்தாவது நாள் மாண்டவர்களுக்கு அந்தியக்கிரியை (அந்திமக்கிரியை) இருப்பத்தியாறாவது நாள் யுதிஷ்டிரர் நகரப்பிரவேசம், இருப்பத்தேழாவது நாள் யுதிஷ்டிர ராஜ்ய பட்டாபிஷேகம், இருபத்தெட்டாவது நாள் நகரமக்களை சமாதானப்படுத்தி மரியாதையும், தானங்களும், இருபத்தொன்பதாவது நாள் அம்புப் படுக்கையில் இருக்கும் பீஷ்மரை - க்ருஷ்ணர், பாண்டவர்கள் அணுகுதல், ஐம்பத்தெட்டாவது நாள் - பீஷ்மர் நிர்யாணம்.

## ஸனாதனப் புதிர் - பகுதி - 22க்கான சரியான பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்

**முதல் பரிசு ரூ. 250/-**

Sri. K.S. Subramanyan, 16/4, Dr. Ranga Road, Mylapore, Chennai - 4.

**இரண்டாம் பரிசு ரூ. 150/-**

Sri. C. Krishnaswami, 23 (New No. 32), Jambulingam Street, Chennai - 34.

**மூன்றாம் பரிசு ரூ. 100/-**

Sri. S. Saranathan, 21, Ranganathan Street, Nehru Nagar, Chrompet, Chennai - 44.

# பாலகர்களுக்கு ஒரு கதை -64

## காரைக்கால் அம்மையார்

காவிரி பாயும் சோழவளநாட்டில் உள்ள காரைக்காலில் ஒரு காலத்தில் கடல் தாண்டி வெளிநாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்த வணிகர்கள் பலர் வாழ்ந்தனர். அந்த வணிகர்களுள் ஒருவரான தனதத்தன் என்பவர் பெரிய தனவந்தர். நேர்மைக்கு ஓர் இலக்கணமாகத் திகழ்ந்தவர். இணையற்ற சிவபக்தர்.

அவருக்கு காலப்போக்கில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. தனதத்தன், அந்தக் குழந்தைக்கு புனிதவதி என்று பெயரிட்டு, மிகவும் அன்புடன் வளர்த்து வந்தார். ஒரே குழந்தையான புனிதவதியைப் பிரிந்து சிறிதுநேரம்கூட அவரால் இருக்கமுடியாது. புனிதவதி மிகவும் அழகான தோற்றம் உடையவள். மிகவும் நன்றாகப் பாடுவாள். அழகாக நடனமாடுவாள். இவற்றையெல்லாம் விடவும், புனிதவதியிடம் காண்போரை ஈர்க்கும் ஒரு தெய்வீகக்களை இயல்பாகவே இருந்தது. தன் வயதை ஒத்த மற்ற குழந்தைகளைப் போல் அவளது மனதானது விளையாட்டுகளிலும், கேளிக்கைகளிலும் செல்லவில்லை. தினமும் தவறாமல் சிவாலயத்திற்குச் செல்வாள். சிவபெருமானை விழுந்து விழுந்து வணங்குவாள். சிவபெருமானின் சன்னதியில் மணிக்கணக்காக நின்றுகொண்டு தரிசனம் செய்வாள். தோழிகள் மணலில் வீடுகட்டி விளையாடும்பொழுது கூட புனிதவதி அழகாக சிவலிங்கம் அமைத்து அதற்கு பூஜை செய்து மகிழ்வாள்.

புனிதவதியின் சிவபக்தியைக் கண்டு தந்தையான தனதத்தனுக்கு ஒருபுறம் மிகவும் ஆனந்தமாக இருந்தாலும், மறுபுறம் அவளது இயல்பிற்கேற்ற வரன் கிடைக்க வேண்டுமே என்ற கவலை அவரை வாட்டியது. சிவபெருமானிடம் இது விஷயமாக பிரார்த்தித்துக் கொண்டேயிருந்தார். சிவபெருமானும் அவரது வேண்டுதலுக்கு செவிசாய்த்தார். காரைக்காலுக்கு அருகிலுள்ள நாகப்பட்டினத்தில் நிதிபதி என்ற ஒரு வணிகர் வாழ்ந்துவந்தார். அவருக்கு பரமதத்தன் என்ற ஒரு மகன் இருந்தான். நிதிபதி, தனதத்தனின் பெண்ணான புனிதவதியைப் பற்றி கேட்டறிந்து அவளையே தன் மகனுக்கு

மணமுடிக்கவேண்டுமென்று முடிவுசெய்து, தனதத்தனை அணுகினார். தன் மகளுக்கு எல்லாவிதங்களிலும் பரமதத்தன் ஏற்றவன் என்றுணர்ந்த தனதத்தன் அவனை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார். திருமணம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. திருமணம் முடிந்து புனிதவதியை அவளது கணவனுடன் அனுப்ப தனதத்தனால் முடியவில்லை. அருமை மகளை பிரிந்திருப்பது என்பதை அவரால் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை.

மாமனாரின் மனநிலையை நன்கு உணர்ந்த பரமதத்தன் அவரிடம், ''புனிதவதியைப் பிரிந்து உங்களால் இருக்க முடியாது என்பதை நான் நன்கு அறிவேன். இருப்பினும், நான் மாமனாராகிய உங்களது வீட்டிலேயே தங்கிவிட்டால், ஊரார் என்னைப் பழிப்பார்கள். எனவே, காரைக்காலிலேயே ஒரு வீடு பார்த்து புனிதவதியுடன் குடியேறிவிடுகிறேன். நான் இங்கேயே வியாபாரம் செய்கின்றேன். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் உங்களது மகளை சந்திக்கலாம்'' என்று கூற, தனதத்தனும் ஆறுதல் அடைந்தார். அவ்வாறே, பரமதத்தனும், புனிதவதியும் காரைக்காலில் தங்கி, தர்மத்தின் வழி இல்லறம் நடத்தினர்.

அந்த சமயத்தில்தான் சிவபெருமான் அவர்களது வாழ்வில் ஒரு திருவிளையாடல் புரிந்தார். ஒருநாள், பரமதத்தனை சந்திக்க அவருடைய கடைக்கு ஒருவர் வந்தார். வந்தவர் பரமதத்தனிடம் இரண்டு உயர்ந்த ரக மாம்பழங்களைத் தந்தார். அந்த மாம்பழங்களைப் பார்த்தவுடனேயே பரமதத்தனுக்கு அவற்றை உண்ணவேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. மதிய உணவின்பொழுது உண்ணலாம் என்று முடிவுசெய்து கடையிலிருந்த பணியாளை அழைத்து அந்தப் பழங்களை தனது மனைவியான புனிதவதியிடம் கொடுத்து வரும்படி பணித்தார். பணியாளும் அப்படியே செய்தான்.

மாம்பழங்களைப் பெற்றுக்கொண்ட புனிதவதி அவற்றை பூஜையறையில் சிவபெருமான் முன்பாக வைத்துவிட்டு, சமையல் வேலையில் ஈடுபட்டாள். அப்பொழுது அங்கு நெற்றி நிறைய திருநீற்றுடனும், கழுத்து நிறைய ருத்ராக்ஷ மாலைகளுடனும், தலையில் ஜடாமுடியுடனும், 'நமசிவாய நமசிவாய'' என்று பஞ்சாக்ஷரத்தை சொல்லிக்கொண்டே, ஒரு சிவனடியார் கையில் திருவோடு

ஏந்தியவாறு வந்தார். அவர் பார்ப்பதற்கு மஹாதேஜஸ்வியாக இருந்தார். புனிதவதி அந்த அடியாரை விழுந்து வணங்கி, அன்று தங்களது வீட்டிலேயே உணவு உட்கொள்ள வேண்டும் என்று வேண்டினாள். அதற்கு ஒப்புக்கொண்ட அந்த அடியாரை ஒரு ஆசனத்தில் அமரச்செய்து, ஒரு இலையில் உணவு பரிமாறினாள்.

ஆனால், அப்பொழுது காய்கறிகள் சமைத்து முடிக்காததால், தன் கணவன் கொடுத்தனுப்பிய மாம்பழங்களுள் ஒன்றை சிறு துண்டுகளாக நறுக்கி, சிவனடியாருக்கு பரிமாறினாள். அவளது உபசாரத்தால் மகிழ்ந்த அந்த அடியாரும் உணவு உண்டபின் அவளை ஆசீர்வதித்துவிட்டுக் கிளம்பினார். அவர் கிளம்பிய சிறிது நேரத்திற்கெல்லாம் பரமதத்தன் மதிய உணவு உட்கொள்ள வீட்டிற்கு வந்தார்.

புனிதவதியிடம் ‘‘நான் காலையில் கொடுத்தனுப்பிய மாம்பழத்தை எடுத்துவா!’’ என்று கூறினார். புனிதவதி அடியாருக்கு கொடுத்தது போக எஞ்சியிருந்த ஒரு மாம்பழத்தை அவருக்குப் பரிமாறினாள். அந்தப் பழத்தை மிகவும் ருசித்து உண்ட அவர் மற்றொரு பழத்தையும் எடுத்துவரச் சொன்னார். புனிதவதிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவள் சிவபெருமானிடம் பக்தி பூண்டிருந்ததுபோல், தன் கணவனிடமும் பக்தி பூண்டிருந்த ஒரு பதிவிரதை. கணவனுக்குத் தெரியாமல் பழத்தை சிவனடியாருக்குப் பரிமாறியதால், கணவனின் சொல்லை மீறிவிட்டோமோ என்று மிகவும் அஞ்சினாள். பூஜையறைக்குச் சென்று சிவபெருமான் முன்பு கண்களில் நீர் மல்க, தனக்கு கணவனின் பேச்சை மீறிய குற்றம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று உள்ளம் உருகி வேண்டினாள். அப்பொழுது அங்கு ஒரு அதிசயம் நிகழ்ந்தது. சிவபெருமான் கருணையால் அவளது கையில் ஒரு மாம்பழம் தோன்றியது. அதை எடுத்துச் சென்று கணவனுக்குப் பரிமாறினாள். இந்த மாம்பழத்தை உண்ட பரமதத்தனுக்கு ஒரு இனம்புரியாத ஆனந்தம் ஏற்பட்டது. உடலில் ஒரு புத்துணர்வு ஏற்பட்டது. தனது இந்த விவரிக்க முடியாத அனுபவத்தை புனிதவதியிடம் தெரிவித்தார். இதற்கு மேலும், நடந்தவற்றை அவரிடமிருந்து மறைக்க முடியாத புனிதவதி, அவரிடம் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் விரிவாகக் கூறி, தான் தவறிழைத்திருந்தால் மன்னித்தருளும்படி வேண்டினாள்.

பரமதத்தனுக்கு புனிதவதி சொல்வதை நம்ப முடியவில்லை. அதே சமயம் அவள் தன்னிடம் பொய் சொல்ல மாட்டாள் என்ற நம்பிக்கையும் அவருக்கு இருந்தது. அவர் புனிதவதியிடம், ''நீ சொல்வது உண்மையானால் சிவபெருமானிடம் பிரார்த்தித்து இன்னொரு பழம் வாங்கிவா!'' என்று கேட்டார். புனிதவதியும் அவ்வாறே சிவபெருமானிடம் வேண்டி, ஒரு பழத்தைப் பெற்று வந்து அவரிடம் கொடுத்தாள். ஆனால் என்ன ஆச்சரியம்! அது அவரது கையிலிருந்து மறைந்துவிட்டது. புனிதவதியின் தெய்வீகத் தன்மையை உணர்ந்த பரமதத்தன், இனியும் தெய்வத்திற்கு சமமான அவளுடன் இல்லறம் நடத்துவது தவறு என்று முடிவுசெய்து, அவளிடம் வியாபார விஷயமாக வெளிநாடு செல்வதாகக் கூறி கிளம்பினார். வியாபாரம் முடித்து அவர் காரைக்காலுக்குத் திரும்பவில்லை. நாகப்பட்டினத்திற்குச் சென்று, அங்கு வேறொரு பெண்ணை மணந்து ஒரு பெண் குழந்தையையும் ஈன்றெடுத்தார். அந்தக் குழந்தைக்கு தான் தெய்வமாக மதித்த புனிதவதியின் பெயரையே சூட்டினார்.

கணவரின் வருகைக்காக பலகாலம் காத்திருந்த புனிதவதிக்கு இந்தச் செய்தி தெரியவர, ஊர்மக்களுடன் சேர்ந்து பரமதத்தனை சந்திக்க நாகப்பட்டினம் சென்றார். அவளது வருகையை அறிந்த பரமதத்தன் தெய்வத்திற்கு அளிக்க வேண்டிய அனைத்து மரியாதைகளையும் அவளுக்கு அளித்து அவளை விழுந்து நமஸ்கரித்தார். அங்கு கூடியிருந்த ஊராரிடம், ''புனிதவதி ஒரு சராசரி பெண்ணல்ல! அவள் ஒரு தெய்வப்பிறவி! அவளை வழிபடலாம். ஆனால், அவளுடன் இல்லறம் நடத்துவது என்பது தவறு'' என்று கூறிவிட்டார்.

இறைவனின் சித்தம் இதுதான் என்பதை உணர்ந்த புனிதவதி, சிவபெருமானிடம், ''ஒரு பெண்ணானவள் அழகிய தோற்றத்துடன் இருப்பது தன் கணவனுக்காகத்தான். என் கணவரே என்னை வேண்டாமென்று கூறியபின் எனக்கு இந்த தோற்றம் எதற்கு?'' என்று பிரார்த்திக்க, சிவபெருமான் அவளுக்கு பேயுருவத்தை கொடுத்து அருளினார். அவருக்கு ''காரைக்கால் அம்மையார்'' என்ற பெயர் வழங்கலாயிற்று. அந்த பேயுருவிலேயே பல சிவதலங்களுக்குச் சென்று வழிபட்ட காரைக்கால் அம்மையார், இமயமலையிலுள்ள

திருக்கயிலாயத்திற்குச் சென்றார். அந்த புனித மலையில் தன் பாதம்படுவது பாபம் என்றெண்ணி, கால்கள் இரண்டையும் கட்டிக்கொண்டு தலையினாலேயே ஏறி சிவபெருமானை தரிசித்தாள். சிவபெருமான், ''நீ என்னை தரிசிக்க இவ்வளவு தொலைவு வரவேண்டிய அவசியமேயில்லை! திருவாலங்காடு என்ற தலத்திலேயே யாம் எப்பொழுதும் வாசம் செய்கிறோம். நீ அங்கு சென்று எம்மை தரிசித்து முக்தியடைவாய்!'' என்று அருளினார்.

காரைக்கால் அம்மையாரும் அவ்வாறே திருவாலங்காடு சென்று, சிவபெருமானை தரிசித்து சிவபதம் அடைந்தார். சிவபெருமானே காரைக்கால் அம்மையாரிடம் திருவாய்மலர்ந்து திருவாலங்காடு க்ஷேத்திரத்தின் பெருமையைக் கூறியதால், இந்த க்ஷேத்திரமானது திருக்கயிலாயத்திற்கு நிகரானதாகக் கருதப்படுகிறது.


ஸ்ரீ ஹரி:

## மதுரமுரளி சந்தா

''மதுரமுரளி'' மாத இதழுக்கு புதியதாக சந்தாதாரராக விரும்புபவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', ப்ரேமிகபவனம், New No. 2, Old No. 24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 83.

சந்தா விவரம் : ஆண்டு சந்தா ரூ. 60/- தனி ப்ரதி ரூ. 5/-

ஆயுள் சந்தா ரூ. 1000/-

வெளிநாடு ஆண்டு சந்தா : ரூ. 300/-

மதுரமுரளி இதழுக்கான சந்தாவை, **''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'** என்ற பெயரில் மட்டுமே M.O. or DD. ஆக அனுப்பவேண்டும். தயவுசெய்து காசோலையாக அனுப்ப வேண்டாம். மணி ஆர்டரில் பணம் அனுப்பும்பொழுது, பெயர், முகவரி, மதுரமுரளி சந்தா எண் முதலியவற்றை "Space for Communication"ல் கட்டாயம் எழுத வேண்டும்.

மதுரமுரளிக்கான தங்களுடைய சந்தாவை புதுப்பிப்பவர்கள் (Renewal) தங்களுடைய முழு முகவரியுடன், தயவுசெய்து தங்களுடைய சந்தா எண்ணை குறிப்பிட்டு Subscription Renewal என்று எழுதி அனுப்பவும். சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது உடனுக்குடன் அதை மிஷனுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம். Email address : contact@madhuramurali.org

# மாலே மணிவண்ணா - 7

- மகாவித்துவான், மயிலம் **வே. சிவசுப்பிரமணியன்**

உலக சிருஷ்டி பற்றிய பொதுக்கருத்தை இங்கே அறிந்து கொள்ளலாம். ஸ்ரீமத் பாகவதத்தில், கபிலாசார்யர் தன் தாயான தேவஹூதிக்கு உபதேசித்ததை ஒட்டி இந்த உலகப் படைப்புத் தத்துவம் விளக்கம் பெறுகிறது. (பாகவதம் - 3 - 26)

உலகம் புதிதாகப் படைக்கப் பெறவில்லை - முன் படைக்கப்பட்டு வாழ்ந்து பரம்பொருளிடம் லயித்த உலகமே புதிதுபோல் மறுபடி படைக்கப்பெறுகிறது. அதனால், உலகம் அநாதி. உலகமாய் இருந்ததனைத்தும் லயத்தின்போது (அதாவது ஒடுங்குகிறபோது) அதனதன் மூலப்பொருள்களில் சென்று அடங்குகின்றன. அந்தந்த மூலப்பொருள்களும் தம்தம் மூலப்பரமாணுக்களில் அடங்கி எல்லாவற்றுக்கும் மூலப்பொருளான மூலப்ரகிருதியும் ஈச்வரரிடம் அடங்கிவிடுகிறது. படைப்பு, காப்பு, அழிப்பாகிய ஒடுக்கம் ஆகிய மூன்றுக்கும் பயன்பட்ட இறைவனின் சக்தியான மாயையும் இறைவனிடமே ஒடுங்குகிறது. அறிவே வடிவமான ஈஸ்வரன் எல்லாம் ஒடுங்கிய நிலையில் அறிவதற்குரிய வெளிப்பொருள் இல்லாததால் அறிவது, அறியப்படும்பொருள், அறிபவர் என்ற முந்நிலையாகிய 'திரிபுடி' தேவைப்படாத நிலை பேரிருக்கையாக பேரானந்தமாக, பேரொளியாக, பேரறிவாக இருக்கும் நிலை.

இந்த லயத்திலிருந்து ஈஸ்வர சங்கற்பம் மீண்டும் ஒடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுகிறது. இதையே உலகம் 'தோன்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்' என்று சிவஞான போதம் முதற்சூத்திரம் சொல்கிறது. ***''இலயித்த தன்னில் இலயித்ததாம் மலத்தால் இலயித்த வாறு உளதா வேண்டும்''*** என்ற சிவஞான போத வெண்பாவும் இங்கு உணரத்தக்கது.

*''உலகு அவன் உருவில் தோன்றி ஒடுங்கிடும் என்பதோரார்''*

என்ற சிவஞான சித்தியாரையும் இங்கே கருதலாம். இப்படி சைவசித்தாந்தத்திலும் உலகம் உள்பொருளாக அநாதியாகப் பேசப்படுவது, ஒடுங்கி மீளத்தோன்றுவது என்ற கருத்து வெளிப்படையாக உள்ளது.

'குடிலை' என்ற சுத்த மாயை 'பரிக்கிரக சக்தி' எனப்படும். வெளியிர் செல்வதும் உள் ஒடுங்குவதும் ஆகிய இருநிலைகளுமே 'பரி' (செலவு) 'கிரக' (உள்ளிடுதல்) சக்தி எனப்பெற்றது. இந்த சுத்தமாயை சக்தியில் ஒடுங்கி சக்தி சிவத்துள் ஒடுங்கி சிவம் இருந்தவாறே இருக்கும் என்பதும் உலகத் தோற்றத்துக்குரிய சங்கற்பம் நிகழ்ந்தவாறே எது எது, எது எதற்குள், எவ்வாறு ஒடுங்கியதோ, அதற்கேற்ப, அவ்வாறு மீளத் தோன்றும் என்பதும் சைவசித்தாந்தம் கூறும் உண்மையே. ஆகவே, உலகம் இல்பொருள் அன்று; உள்பொருளே; அநாதியே. எனவே, ஒடுங்கிய உலகமே மீளத் தோன்றுகிறது. இப்பொதுக்கருத்தை இறைவனின் படைப்பியக்கத்தை மிகச் சுருக்கமாகவும் அழகாகவும் புறநானூறு கடவுள் வாழ்த்து

*''பெண்உரு ஒருதிறன் ஆகின்று அவ்வுரு*
*தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்''*

என்று கூறுகிறது. சிவபரம்பொருள் பெண்ணுருவை ஒரு பக்கம் உடையதாக உள்ளது; உலக ஒடுக்கத்தின்போது அப்பெண் வடிவத்தையும் சிவம் தன்னுள்ளே அடக்கி மறைத்துக்கொண்டு சிவமேயாகி நிற்றலையும் செய்யும் என்பது ஒரு பொருள். இனி, பெண் உரு ஒரு பக்கம் உள்ளது; அச்சக்திவடிவானது தன்னுள் எல்லாப் பொருள்களையும் ஒடுக்கி, தான் சிவத்துள் மறைந்து ஒடுங்கினும் ஒடுங்கும் என்பதும் ஒரு பொருள். இந்த இரண்டு பொருள்களும் புறநானூற்றின் பழைய உரையில் உள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியப் பரப்பில் உலகத் தோற்றம் பற்றிய சாத்திர நுட்பம் எவ்வளவு அழகாகச் சொல்லப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறிந்து மகிழலாம்.

இதுவே, வேறொருவகையில் பரம்பொருளாகிய ஸ்ரீமந் நாராயணனிடத்தில் உலகம் ஒடுங்கி மீளாத் தோன்றுவது பற்றிய செய்தி கபிலாசார்யர் தேவஹூதிக்குச் சொல்லுவதாக ஸ்ரீ பாகவதத்தில் சொல்லப்பட்டது. அவ்வாறு பாகவதம் சொல்கிற செய்தியை ஸ்ரீய:பதியாகிய திருமால் ஆதிவராகமாகி உலகை எடுத்து நிறுத்திய உலகத் தோற்றச் செய்தியாக பரிபாடல் சொல்கிறது. பாகவதமும் பரிபாடலும் சொல்கிற செய்தி ஒன்றே. ஆனால், சொல்லும் முறையும் மொழியும்தான் மாறியுள்ளன என்பது உணரத்தக்கது. இனி பரிபாடல் கூறும் உலகத் தோற்றம் பற்றிக் காண்போம். (தொடரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 14

**(தொடர்ச்சி)**

வினோத்ஜிக்கு ஸேவை செய்து வந்த ராஜகுமாரி ராதா திடீரென்று ஜுரத்தில் படுத்தாள். ஸ்ரீ வினோத்ஜி, ராதாவின் அன்னையின் கனவில் தோன்றி, ''ராதா பிழைக்கமாட்டாள். ஆனால், நீ வருந்த வேண்டாம். அவள் என்னை மணப்பதற்காகத்தான் இறப்பாள். உங்கள் தோட்டத்திலுள்ள தேவதாரு மரத்தினால் ராதாவைப் போன்ற மூர்த்தி செய்து அந்த மூர்த்திக்கும் எனக்கும் திருமணம் நடத்திவிடு'' என்று கூறினான்.

ராதாவின் தாயாருக்கு அப்போதுதான் வினோத்ஜிக்கு நிஜமாகவே ராதாவைத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் என்று நம்பிக்கை ஏற்பட்டது. தனது கனவைப் பற்றி தன் கணவனிடம் கூறினாள். இருவரும் கண்ணீர் பெருக்கினர். அதே நேரத்தில் வினோத்ஜியின் லீலையை நினைத்து சந்தோஷம் அடைந்தனர். தங்கள் மகள் இறந்தாலும் வினோத்ஜியும் ராதாவும் தெய்வ மூர்த்திகளாக தங்கள் வீட்டிலேயே பெண்ணும் மாப்பிள்ளையுமாக இருப்பார்கள் என்று நினைத்து சந்தோஷத்துடன் மனதைத் தேற்றிக் கொண்டனர்.

தேவதாரு மரத்தை வெட்டி ராதாவின் மூர்த்தி செய்ய ஏற்பாடுகள் செய்தனர். மூர்த்தி முழுவதும் தயாரான அன்று ராதா இறந்துவிட்டாள். அவளது இறுதியாத்திரைக்கும். மூர்த்தியின் திருமணத்திற்கும் ஒரே சமயத்தில் ஏற்பாடுகள் நடந்தன. திருமணம் முடிந்தவுடன் வினோத்ஜியை ராதா வினோதா என்று அனைவரும் அழைக்கலானார்கள். வினோத்ஜியும் வினோதினியும் (ராதா) இன்றும் பிருந்தாவனத்தில் ராமகிருஷ்ண ஸேவாச்ரமத்திற்கு அருகில் உள்ள தனாசா கோவிலில் ஆனந்தமாக எழுந்தருளி உள்ளதைக் காணலாம். எந்தத் திதியில் அவர்களுக்குத் திருமணம் ஆயிற்றோ அந்தத் திதியில் இன்றும் உத்ஸவம் கொண்டாடப்படுகிறது.

ராஜா பன்வாரிலால் உயிருடன் இருக்கும் வரை தனாசா எஸ்டேட்டின் வாழ்க்கை ராதா வினோதாவைச் சுற்றியே நடைபெற்று

வந்தது. கதை, கீர்த்தனம் என்றே பொழுது கழிந்தது. வனமாலிராயா என்பவர் பொறுப்பேற்ற பிறகு இந்த வழக்கங்கள் குறைந்து வந்தது. ஏனென்றால் வனமாலிராயா ப்ரஹ்மசமாஜ் தர்மத்தைக் கடைப்பிடித்து மூர்த்தி பூஜையில் நம்பிக்கை இல்லாதவராக ஆகிவிட்டார். எனவே, சராசரி பூஜை மட்டும் ராதா வினோத்ஜிக்கு நடந்து வந்ததே தவிர உத்ஸவமாக கீர்த்தனங்கள், வழிபாடுகள், கதை, ப்ரவசனம் ஆகியவை நடைபெறவில்லை.

அந்தக் காலகட்டத்தில் ஜகபந்துப்ரபு என்ற மஹான் வாழ்ந்து வந்தார். அவருடைய காந்தியும் சோபையும் அவரை மஹாப்ரபுவின் அவதாரம் என்றே மக்களுக்குத் தோன்ற வைத்தது.

ஒரு சமயம் அவர் பபானா நெடுஞ்சாலையில் தனது சிஷ்யர்களுடன் உத்ஸாகமாக நாமசங்கீர்த்தனம் செய்துகொண்டு வரும்பொழுது வனமாலிராயாவும் தன் பல்லக்கில் காவலர்கள் சூழ சென்று கொண்டிருந்தார். ஜகபந்துப்ரபுவைப் பார்த்தவுடனே தனது பல்லக்கிலிருந்து வனமாலிராயா இறங்கி அவரை வணங்கினார். மஹானின் ப்ரபாவத்தால் வனமாலிராயாவும் நாமசங்கீர்த்தனம் செய்ய ஆரம்பித்தார். ஜகபந்துப்ரபுவைத் தனது எஸ்டேட்டுக்கு வருகை தந்து ஆசீர்வதிக்கும்படி ப்ரார்த்தித்துக்கொண்டார்.

வீடு திரும்பிய வனமாலிராயாவுக்குப் புதிய பக்தி ஊற்று பெருக்கெடுத்ததை உணர முடிந்தது. வறட்டு ப்ரஹ்ம உபாஸனை என்ற பாலைவனத்திலிருந்து தான் பக்தி என்னும் சோலைக்குள் ப்ரவேசித்ததை உணர்ந்தார். ஜகபந்துப்ரபுவும் வனமாலிராயாவின் வீட்டிற்கு வந்து ராக, அனுராக பக்தியின் பெருமையையும் முறைகளையும் பற்றி எடுத்துக்கூறி இறைவனிடம் அன்பு செலுத்தி வழிபடும் உயர்ந்த பக்தியை அவருக்கு உபதேசித்தார்.

வனமாலிராயா இப்போது ராதாவினோத்ஜியை மிகவும் நேசிக்க ஆரம்பித்தார். அவர் வினோத்ஜிக்கு முன்புபோல் விதவிதமாக உத்ஸவங்கள் கொண்டாடி மகிழ்ந்தார். அந்த சமயத்தில் வனமாலிராயாவுடன் கிருஷ்ணசுந்தரராயாப்ரபு என்ற சித்த புருஷரும் இருந்தார். அவருக்கு ஹூக்கா பிடிக்கும் வழக்கம் இருந்தது. கண்ணனின் லீலா ஸ்மரணத்திலேயே வாழ்ந்த அவர்

ஹுக்காவை மறந்த நிலையில் இருக்கும்போது வினோத்ஜி சகஜமாக ஹுக்கா பிடிப்பானாம்.

1892-ஆம் ஆண்டு க்ருஷ்ணசுந்தராயாப்ரபு இறைவனடியை அடைந்துவிட்டார். அவர் மறைந்தவுடன் வினோத்ஜிக்கு ஹுக்கா கிடைக்கவில்லை. நான்கு நாட்கள் கழித்து பூசாரி ஆழ்ந்து ஜபம் செய்யும் சமயம் அவரது தியானத்தில் வினோத்ஜி தோன்றி, ''எனக்கு ஹுக்கா இல்லாமல் நான்கு நாட்கள் ஆகிவிட்டன. ராயாப்ரபு மறைந்த பிறகு எனக்கு யாரும் ஹுக்கா தரவில்லை. எனக்கு அது தேவை'' என்றான். மாலையில் வனமாலிராயா கோவிலுக்கு வந்தபோது பூஜாரி தனக்கு நேர்ந்த அனுபவத்தைக் கூறினார். உடனே வனமாலிராயா வினோத்ஜிக்கு ஹுக்கா ஸேவை செய்ய ஏற்பாடுகள் செய்தார். ஆனாலும், அவருக்கு வினோத்ஜி நிஜமாகவே ஹுக்கா பிடிப்பானா என்ற சந்தேகம் இருந்து வந்தது.

முன்பு கூறிய ஜகபந்துப்ரபு ஒரு சமயம் வனமாலிராயாவின் அரண்மனையில் தங்கியிருந்தார். அவர் ஒருநாள் ராஜ்போக் முடிந்தவுடன் வனமாலிராயாவை அழைத்து, ''நாம் வினோத்ஜியின் ஹுக்கா பிடிக்கும் லீலையை அனுபவிப்போம்'' என்று கூறி அவரை கோவிலின் வராந்தாவில் அமரச் செய்தார். சிறிது நேரம் சென்றதும் ஜகபந்துப்ரபு வனமாலிராயாவிற்கு திவ்ய ச்ரவண (கேட்கும்) சக்தியை அளித்தார். அதன் விளைவாக வனமாலிராயாவிற்கு வினோத்ஜி ஹுக்கா இழுக்கும் சத்தம் கேட்டது. அவரும் **பா**வ சமாதியை அடைந்தார். கண்களிலிருந்து தரதரவென்று கண்ணீர் பொழிந்தது. வனமாலிராயாவிற்கு ஸ்ரீவினோத்ஜியின் மூர்த்தியின் மீது தீவிரமான ப்ரியமும் நம்பிக்கையும் ஏற்பட்டது. யாராவது அவனை வெறும் மூர்த்தி என்றால் போதும் அவருக்குத் தாளாது. 1897-ஆம் ஆண்டு ப்ருந்தாவனம் சென்று ராதிகாநாதகோஸ்வாமி என்பவரிடம் தீக்ஷை பெற்று வினோத்ஜிக்கு பூஜாரியாக ஸேவை செய்யும் பாக்கியத்தைப் பெற்றார். ஸ்ரீ வினோத்ஜியின் ஸேவை தவிர வேறு எதுவுமே செய்ய முடியாத நிலையை அடைந்தார். நம்பிக்கையான மானேஜராகத் திகழ்ந்த ஸ்ரீகாமினிகுமார கோஷா என்பவரிடம் எஸ்டேட் பொறுப்புகளை ஒப்படைத்தார்.

வ்ருந்தாவனம் சென்று அங்கும், ராதாகுண்டத்திலும் கோவில்களைக் கட்டினார். ராதாவினோத்ஜியுடன் வ்ருந்தாவனம், ராதாகுண்டம் சென்று, இந்த இரண்டு கோவில்களிலும் மாறி மாறி வசித்து வந்தார். வ்ருந்தாவனம் வரும்போதெல்லாம் அங்குள்ள வைஷ்ணவர்கள் வனமாலிராயாவிடம் வருவார்கள். எந்நேரமும் கதையும் கீர்த்தனமும் நடக்கும். தனது செல்வத்தை எல்லாம் வைஷ்ணவர்களுக்கு ஸேவை செய்வதிலேயே செலவழித்தார். பக்தி சாஸ்த்திரம் கற்றுக் கொடுப்பதற்காக ஒரு பாடசாலையும், வைஷ்ணவர்களுக்கு ஒரு சிகித்ஸா சாலையும் கட்டினார். ஸ்ரீமத் பாகவதம் வ்யாக்யானத்தை ப்ரசுரிக்க ஒரு அச்சுக்கூடம் நிறுவினார். மற்ற பக்தி கிரந்தங்களை சாதுக்களுக்கு இலவசமாக வழங்க ஏற்பாடு செய்தார்.

இப்படி ராதாவினோத்ஜி ஸேவையிலும், வ்ரஜத்திலுள்ள மஹாத்மாக்களுக்கு ஸேவை செய்வதிலும், வாழ்நாளைக் கழித்து அனாயாசமாக ராதாவினோத்ஜியின் நிஜதாமமான கோலோகத்தை அடைந்தார். (தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

## உழவாரப்பணி

காஞ்சிபுரத்திலுள்ள திவ்யதேசங்களான ஸ்ரீ பச்சைவண்ணப் பெருமாள் மற்றும் ஸ்ரீ பவழவண்ணப்பெருமாள் திருக்கோயில்களில் கடந்த 8-3-2003, 9-3-2003 தேதிகளில் உழவார கைங்கர்யங்கள் செய்யப்பட்டன.

ஸ்ரீ வியாசபகவானால் பிரதிஷ்டை செய்யப்பட்டதும், காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் இரண்டு வருட காலம் தங்கியிருந்ததுமான காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீ வியாச சாந்தாலீஸ்வரர் திருக்கோயிலில் 5-3-2003 முதல் 16-3-2003 வரை உழவார திருப்பணி நடைபெற்றது.

ஸ்ரீ குருமூர்த்தி அவர்கள் இந்த கைங்கர்யங்களை ஸ்ரீஸ்வாமிஜியின் ஆக்ஞைபடி நடத்தினார்கள்.

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 91

*தீரமிலகத்திற் றேடியுந் தனையான்*
*திரும்பவற் றேனரு ளருணாசலா* (தொடர்ச்சி)

மஹாத்மாக்கள் செய்யும் காரியங்களை உலகம் அப்படியே பின்பற்றும் என்பதை காண்பிக்க உபநிடதத்தில் ஒரு கதை வருகிறது. ஒரு ஊரில் ஒரு குரு இருந்தார். அவர் ப்ரும்மசாக்ஷாத்காரம் அடைவதற்காக தனது ஆஸ்ரமத்தில் தியானத்திற்கு அமர்ந்தார். அப்பொழுது ஒரு பூனைக்குட்டி குறுக்கும் நெடுக்குமாக ஓடி, சப்தம் செய்து, அவருடைய தியானத்தை கலைத்து வந்தது. தியானத்தில் ஆழ்ந்து செல்ல பூனைக்குட்டி தடையாக இருந்ததால், குருவானவர் தனது சிஷ்யனைக் கூப்பிட்டு அப்பூனைக்குட்டியை கட்டிப்போடச் சொன்னார். அவனும் அவ்வாறே செய்தான். மேற்கொண்டு குரு தியானத்தில் ஆழ்ந்து, ஆத்மசாக்ஷாத்காரம் கிடைக்கப் பெற்றார்.

பின்னர் அவர் தனது சீடர்களில் ஒருவனை பீடத்தில் அமர்த்திவிட்டு, சித்தியடைந்தார். அந்த சீடன் பலவிதமாக முயற்சி செய்தும் அவனுக்கு தியானம் கைகூடவில்லை. அவன், ''நமது குருநாதர் இதே இடத்தில்தான் தியானம் செய்தார். அவருக்கு தியானம் கைகூடியது. நமக்கு தியானம் கைகூடவில்லையே'' என்று தீர்க்கமாய் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். ''நம் குருநாதர் ஒரு பூனைக்குட்டியை கட்டிப்போட்டிருந்தார். நாமோ அதைச் செய்யவில்லை அதனால்தான் நமக்கு தியானம் சித்திக்கவில்லை'' என்பதே அந்த முடிவு. இந்த எண்ணம் அவனுக்குத் தோன்றியவுடன் அவன் தன்னுடைய சீடனை அழைத்து, ஒரு பூனைக்குட்டியை அருகில் கட்டிப்போடச் சொன்னான். அவனும் அதுபடி ஒரு பூனைக் குட்டியை கட்டிப்போட்டான். பின்னர் பீடத்தில் அமர்ந்திருந்தவனுக்கு தியானம் ஸித்தித்து, அவனும் ஞானியானான்.

அவனுக்குப் பிறகு, பீடத்தில் அமர்ந்தவனோ, பீடத்தில் அமர்ந்தவுடன், தனது சீடனை அழைத்து ஒரு பூனைக்குட்டியை கட்டிப்போடச் சொன்னான்.

பின் அவன், ''மோக்ஷம் செல்ல பூனைக்குட்டியை கட்டிப்போடுவது அவசியமா, தியானம் செய்வது அவசியமா என்றால், பூனைக்குட்டியை கட்டிப்போடுவதே போதும். ஏனெனில் முதல்குரு பூனைக்குட்டியை கட்டிப்போட்டுவிட்டுத் தியானம் செய்தார். இரண்டாவது குருவுக்கோ பூனைக்குட்டி இல்லாமல் தியானம் கைகூடவில்லை. பூனைக்குட்டியைக் கட்டிப்போட்டவுடன் தியானம் கைகூடி, மோக்ஷம் சென்றார். ஆக, பூனைக்குட்டியை கட்டிப்போட்டாலே மோக்ஷம் சென்று விடலாம்'' என்று தன்னிடம் வருபவர்களுக்கு உபதேசித்தான். ஆக, மஹாத்மாக்களின் காரியங்களை உலகம் வெகுவாக கவனிப்பதால், தங்களுக்குப் பயனில்லை எனினும் லோகக்ஷேமார்த்தமாக (உலகின் பயனின் பொருட்டு) காரியங்களை அவர்கள் செய்கின்றனர்.

வேதாந்த கிரந்தங்களை (நூல்கள்) படித்துவிட்டு, ஆத்மவிசாரம் பழகினால், மனது அடங்காது. மனதானது வெளிமுகமாய் (உலக விஷயங்களை நோக்கி) ஓடியவண்ணமாகவே இருக்கும். பலகோடி ஜன்மாக்களில் (பிறப்புகளில்) மனைவி, குடும்பம், வேலை என்று உலகவிஷயமாய் மனது ஓடியவண்ணம் இருந்ததே இதற்குக் காரணம். பழக்க வாசனையினால், மனது உலக விஷயமாகவே ஓடுகிறது. அது உள்முகப்பட்டதே இல்லை.

குருவானவர் தனது சீடனின் வெளியில் செல்லும் மனதை உள்முகமாய் திருப்பிவிடுகிறார். அப்படி திருப்பிய மனதை உள்ளிருந்து வாங்கி ஹ்ருதயஸ்தானத்தில் ஒடுக்கியும் வைக்கிறார். இதுவே குருவின் அனுக்ரஹம். அனுக்ரஹம் என்பது செயலல்ல. Grace is not an act. சிஷ்யன் எந்த அளவு குருவிடம் சிரத்தையுடனும், பக்தியுடனும் இருக்கிறானோ அந்த அளவு குருவின் அனுக்ரஹம், அவருடைய சம்மதமில்லாவிடினும், சிஷ்யனை சென்றடையும். ஸனாதனமான சாஸ்திரங்களிலும், குரு உபதேசம் செய்யும் மார்க்கத்திலும், குருவாக்யத்திலும், குருவின் மேலும், நம்பிக்கை வைப்பதற்கே சிரத்தை என்று பெயர். விடாமுயற்சியுடன் சாதனைகளை பழகுவதற்கு சிரத்தை என்று பெயரில்லை. உண்மையான சிரத்தையும், குருவிடம் பக்தியுமிருந்துவிட்டால், நாம் சாதனை செய்து அடைய முடியாததை, குருவின் அனுக்ரஹம் சுலபத்தில் சாதித்துக் கொடுத்துவிடும். குருவின் அனுக்ரஹம் அத்தகையது.

நமது ஸனாதனமான மதத்தில் குழந்தை பிறந்ததிலிருந்து பலவித கிரியைகளை (சடங்குகளை) செய்கிறோம். புண்யாஹவசனம், (குழந்தை பிறந்து 10 நாட்களில் செய்தல்), ஆயுஷ்ய ஹோமம் (குழந்தைக்கு ஒரு வருடம் பூர்த்தியாகும்போது செய்யும் ஹோமம்) இப்படி பல கிரியைகளை செய்கிறோம். ஒரு ஜீவன், முக்தி நிலையை அடையும்வரை இப்படிச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால், ஜீவன் சுத்தம் ஆகிறான். எப்படி என்றால், ஒரு உதாரணம் மூலம் புரிந்துகொள்ளலாம்.

ஒரு மலையில் ஒரு கல் இருக்கிறது. யாரோ ஒருவர் வந்து அதன்மேல் அசுத்தம் செய்துவிட்டுப் போகிறார். வேறு ஒருவர் வந்து அதே கல்லை பிறிதொரு சமயம் பார்க்கிறார். அவர் கண்ணில் பட்டது அந்த கல்லிற்கு முதல் கிரியை. அவர் அந்தக் கல்லை வைத்துக்கொண்டு நல்ல சிற்பம் செதுக்க முடியுமா என்று நினைத்தார். இது இரண்டாவது கிரியை (செயல்). அவர் ஒரு சிற்பியை அழைத்துவந்து, இந்தக் கல்லிலிருந்து நல்ல சிற்பம் செதுக்கலாமா என்று கேட்டார். அவன் சரி என்று சொன்னான். உடன் அக்கல்லைப் பெயர்த்து வந்தனர். இது அடுத்த கிரியை. சிற்பி அதை நன்கு சுத்தம் செய்து, ஒரு சில்ப சாலைக்கு வேண்டிய அளவுக்கு வெட்டி எடுத்துச் சென்றான். இது அடுத்த கிரியை. அக்கல்லிலிருந்து அழகான ஒரு தெய்வத்தின் சிலையை வடிவமைத்தான். அந்த தெய்வத்தின் சிலையை (கிருஷ்ண சிலையோ, தேவியின் சிலையோ ஏதோ ஒரு தெய்வத்தின் சிலை) ஒரு கோவிலில் பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகம் செய்தனர். இது ஒரு கிரியை. அங்கு வந்த மக்கள் பலரும் அந்த சிலையின் முன் நின்று, ‘‘ஸ்வாமி! நீதான் காப்பாற்ற வேண்டும்’’ என்று வேண்டுகின்றனர்.

ஆக, அசுத்தப்படுத்தப்பட்ட கல்லிற்கே பல கிரியைகளினால் ஸ்வாமியாகி, அனுக்ரஹம் செய்யும் சக்தி வருகிறது. அதுபோலவே, ஒரு உத்தம குருவின் அனுக்ரஹத்தினால் சீடன் பூரணத்துவத்தை அடைகிறான். இந்த அனுக்ரஹத்திற்கு கோடி நாமஜபமோ, தீர்த்த யாத்திரையோ, க்ஷேத்ராடனமோ, ஈடாகாது. உத்தம குருவின் கடாக்ஷம் (அருள்) அத்தகையது.

'தீரமில்' - விவேக வைராக்யங்கள் இல்லாத ஒருவன் குருவிடம் சரணாகதி செய்தானே எனில், அவனுக்கு விவேக வைராக்யங்கள் குருகடாக்ஷத்தால் ஏற்படும். விவேக, வைராக்யங்கள் இல்லை என்றால், தேவை இல்லை என்று விட்டுவிட முடியாது. ஏனெனில், பல ஜன்மங்கள் எடுத்தாலும், விவேக வைராக்யங்களை அடைந்தே தீரவேண்டும். அதற்காகத்தான் பிறவியே ஏற்படுகிறது. ஒரு உத்தம குருவை அடைந்து அவரிடம் சரணாகதி செய்வதையே வாழ்வின் லக்ஷ்யமாய் கொள்ள வேண்டும். நாம் தெய்வத்திடம் உண்மையான பக்தி கொண்டிருந்தாலே போதும். குருவானவரை தெய்வம் காண்பித்து கொடுத்துவிடும் அல்லது தெய்வமே குருவாக வரும்.

***'தீரமில் அகத்தில் தேடியும் உந்தனையான் திரும்பவுற்றேன் அருள்'*** - இங்கு அருணாசலேஸ்வரனிடம் அவனது கிருபையினால் தனக்கு விவேக, வைராக்யங்களைக் கொடுத்து, மனதை ஹ்ருதயத்தில் ஒடுக்கச் சொல்கிறார் ஸ்ரீ ரமண மஹரிஷிகள். (தொடரும்)

## ஸனாதனப்புதிர் - பகுதி - 24க்கான - விடைகள்

1. கிருஷ்ணபக்ஷ நவமியில் ஆரம்பித்து - அமாவாசை வரை மொத்தம் எட்டு நாட்கள் நடந்தது.
2. சித்திரை மாத சுக்லபக்ஷ பஞ்சமி
3. சித்திரை மாத சுக்லபக்ஷ ஷஷ்டி- மறுநாள் ஸப்தமி அன்று பட்டாபிஷேகம்.
4. சித்திரை மாதம் - சுக்லபக்ஷ த்ரயோதசி. கிருஷ்ணபக்ஷ நவமி - ஸம்ஸ்காரம், சுக்லபக்ஷ பஞ்சமி - 12வது நாள் சிரார்த்தம்,
5. கைகஸி, ஸுமாலி.
6. வஜ்ர மாலா, கும்பன், நிகும்பன்.
7. ராவணன் (தந்தை) தான்யமாலி (தாய்).
8. வேதவதீ; உமாதேவீ, நந்தீஸ்வரர், புஞ்ஜிகஸ்தலா, ரம்பை
   6-60-11, 6-60-12, 7-17-35
   7-16-17, 6-13-14, 7-26-33
9. 1-1-1, 1-30-23, 1-67-12
   2-15-20, 2-40-16, 2-67-34
   2-99-25, 3-11-44, 3-43-17
   3-72-21, 4-22-20, 4-43-34
   5-4-1, 5-26-41, 5-53-26,
   6-10-28, 6-41-69, 6-59-150
   6-72-11, 6-94-26, 6-119-24
   7-16-27, 7-34-41, 7-66-1
10. ஏழு காண்டங்கள், 647 ஸர்க்கங்கள், 24253 ஸ்லோகங்கள், உத்திர காண்டம் இல்லாமல் 500 ஸர்க்கங்கள் - 6 காண்டங்கள் - 24000 ஸ்லோகங்கள் என்றும் கூறுவர் (1-4-2)
11. ப்ரஹல்லாதன், பலி, விபீஷணன்
12. 39 வயது - சித்திரை - ஸப்தமி
    40 வயது - பங்குனி மாதம்,
    53 வயது, 110 வயது

# செய்திகள்

### பிப்ரவரி 28-ந் தேதி முதல் மார்ச் 4-ந் தேதி வரை

மதுரை ஸ்ரீ மதனகோபாலஸ்வாமி திருக்கோயிலில் இரவு 7 மணி முதல் 9 மணி வரை பக்த சரித்ரங்கள் பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

### மார்ச் 5-ந் தேதி

சேலம் ஸ்ரீ ராமக்ருஷ்ணாமிஷனில் ஸ்ரீராமக்ருஷ்ணரைப் பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாஸம் செய்தார்கள்.

### மார்ச் 7-ந் தேதி

சென்னை, கொட்டிவாக்கம், வெங்கடேஸ்வரா நகரில் மாலை 5 மணி முதல் 6 மணி வரை ''ராமநாம ப்ரபாவம்'' பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

### மார்ச் 8-ந் தேதி

சென்னை, குரோம்பேட்டை, சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ராவில், விஷ்ணு ஸஹஸ்ரநாம மண்டலியினர் சார்பில் மாலை 6.00 மணி முதல் 7.30 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜி உரையாற்றினார்கள்.

### மார்ச் 9-ந் தேதி முதல் மார்ச் 16-ந் தேதி வரை

சென்னை, பிரேமிகபவனத்தில் காலை 9 மணி முதல் 11 மணி வரை ஸ்ரீ ரங்க சதகம் பாடப்பட்டது. மார்ச் 9-ந் தேதி முதல் 14-ந் தேதி வரை இரவு 7 மணி முதல் 9 மணி வரை, ஸ்ரீ ஸ்வாமிஜி, ''திருமாலை'' உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

### மார்ச் 16-ந் தேதி

சென்னை மயிலாப்பூர், ஸ்ரீ கபாலீஸ்வரர் கோவில் அறுபத்துமூவர் உத்ஸவத்தில் நம் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா சார்பில் அகண்ட நாமகீர்த்தனம் நடைபெற்றது.

### மார்ச் 17, 18-ந் தேதிகள்

சென்னை மந்தைவெளி, ஸ்ரீ குப்புசுவாமி - ஸ்ரீமதி பத்மினி குப்புசுவாமி தம்பதியினரின் இல்லத்தில் நடைபெற்ற ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

# திருக்குலத்தோர் திருக்கோயில் திருப்பணித் திட்டம்

சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டோரின் பொருளாதார மற்றும் உலகியல் முன்னேற்றத்திற்காக அரசாங்கமும், பல தொண்டு நிறுவனங்களும் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. எனவே, அவர்களது ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்று ஸதா கவலைப்பட்டு வரும் மும்பையைச் சேர்ந்த 'தர்மாத்மா', 'தர்மகல்பதரு' ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆலோசனையைப் பெற்று ''திருக்குலத்தோர் திருக்கோயில் திருப்பணித் திட்டம்'' என்று ஒரு திட்டத்தை வகுத்துள்ளார்கள்.

GKR Charities என்ற தொண்டு நிறுவனத்தின் நிறுவனரான ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்கள், தர்மகாரியங்களுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்து தொண்டாற்றி வருகின்றார். மேற்படி திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் உள்ள 108 கிராமங்களில் ஹரிஜன வீதிகளில் உள்ள கோயில்களுக்கு திருப்பணி செய்யப்படும். ஏற்கனவே, இத்திட்டத்தின் கீழ் பழையகூடலூர் மாரியம்மன் கோயில், விஸ்வநாதபுரம் மாரியம்மன் கோயில், மருத்தூர் மாரியம்மன் கோயில் மற்றும் ராஜகோபாலபுரம் பிடாரியம்மன் கோயில் ஆகிய நான்கு கோயில்களுக்குத் திருப்பணி செய்யப்பட்டுவிட்டது. தற்சமயம், காரைமேடு மாரியம்மன் கோயில் மற்றும் மாதிரிமங்கலம் பெரியநாயகியம்மன் கோயில் திருப்பணி நடைபெற்று வருகின்றது.

ஸ்ரீ ஸாந்திபனி குருகுலம்

**அறிவிப்பு**

நமது ஸாந்திபனி குருகுல வித்யார்த்திகளுக்கு 28-4-03 முதல் 13-6-03 வரை வருடாந்திர விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

# பக்தர்களின் கவனத்திற்கு!

நமது **மதுரபுரி ஆஸ்ரம வளாகத்திற்குள்** தியானகூடமோ, தெய்வ பிரதிஷ்டையோ, அதிஷ்டானமோ எதுவும் கிடையாது. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும் காலங்களில், **மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு பூஜையும் ஸத்ஸங்கமும்** நடைபெறும். ஆஸ்ரம வளாகத்திற்குள் **யஜுர், ஸாம வேதபாடசாலை** நடந்து வருகின்றது. சுமார் அறுபது வித்யார்த்திகள் வேதம் பயின்று வருகிறார்கள். ஆஸ்ரமத்தில், கைங்கர்யம் செய்து வருபவர்களும் அவர்களுடன் தங்கியுள்ளார்கள். வேதம் பயிலும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் **ஸ்ரீ ஸ்வாமிஜி ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும்பொழுது மட்டுமே பக்தர்கள் காலை 9 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும்** தரிசனத்திற்கு ஆஸ்ரமத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஆஸ்ரம வளாகத்திற்கு பக்கத்திலேயே ஸ்ரீ ஸ்வாமிஜியால் **ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் ஆலயம்** நிர்மாணிக்கப்பட்டு நித்ய ஆராதனைகள் நடந்து வருகின்றது. தினமும், **காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 8 மணி வரையிலும்** கோவில் திறந்திருக்கும். பக்தர்கள் இந்த நேரத்திற்குள் எப்பொழுதும் பெருமாளை ஸேவிக்கலாம்.

சென்னை K.K. நகரில் (ஜாபர்கான்பேட்டை) பிரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி இருக்கும் சமயத்தில் அவரை **காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரையிலும்** தரிசனம் செய்யலாம். ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யும்பொழுது அவரிடமிருந்து **பகவந்நாம உபதேசம்** பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும் **மதுரமுரளி** இதழில் ஸ்ரீ ஸ்வாமிஜி, அந்த மாதத்தில் எங்கு இருப்பார் என்ற விவரம் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுவிடும். இதைத்தவிர, மற்ற நேரங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யவேண்டும் என்றால் **முன் அனுமதி** பெற்றுக்கொண்டு தரிசிக்கலாம்.

கடிதங்களை நமது நிர்வாக அலுவலகத்திற்கு "Personal Secretary To H.H. Sri Sri Muralidhara Swamiji" என்று அனுப்ப வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி கீழே தரப்பட்டு உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் உதவியாளருக்கே கடிதங்களை அனுப்ப வேண்டும. அவர் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவிப்பார். நமது மிஷனிற்கு E-mail address உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தனிப்பட்ட E-mail address கிடையாது.

**கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**

"Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji"**
**Guruji Sri Muralidhara Swamigal Mission**
Premika Bhavanam, New No.2, (Old No.24),
Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083.
E-mail : contact@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

**நூல்கள்**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்
3. சிந்தனையில் உதித்த பொன்மலர்கள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

**கீர்த்தனங்கள்**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassete, Audio CD |

மிஷன் வெளியீடுகள் அனைத்தும் பிரேமிகபவனத்தில் கிடைக்கும்.